வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண்.3273/ஆ1/2021 நாள் : 27.10.2021

பொருள்: கல்வித்துறை - தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் - வேலூர் மாவட்டம் - 2021-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி - மற்றும் - தீபாவளி பண்டிகை கால கதர் சிறப்பு விற்பனைக்கு - குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது - நடவடிக்கைகள் - மேற்கொள்ளுதல்- தொடர்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சுற்றறிக்கை, நக.எண்.403/கே/2021 நாள்:21.10.2021

மேற்காண் பொருள் சார்பாக, பார்வையில் கண்டுள்ள வேலூர் மாவட்ட ஆட்சியரின் சுற்றறிக்கையின்படி, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, 02.10.2021 முதல் தீபாவளி சிறப்பு விற்பனை நடைபெற்றுவருகிறது.

கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்கு மத்திய அரசு, மாநில அரசுகளால் 30% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. எனவே, கல்வி துறையில் பணிபுரியும், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தெரிவித்து, இந்த நல்ல வாய்ப்பினை பயன் படுத்தி கதர் இரகங்களின் விற்பனையை அதிகரித்து கிராம தொழில்களை ஊக்குவிக்கு வேண்டும், என வேலூர் மாவட்ட அனைத்து வகையான தலைமை ஆசிரியர்கள் கேட்டு கொள்ளப்படுகிறார்கள். கடன் தொகையினை 10 தவணைகளில் சம்பந்தபட்ட அலுவலர்கள் மூலமாக ஊதியத்தில் பிடித்தம் செய்யமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. மாவட்ட கல்வி அலுவலர்
   வேலூர்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்,
   வேலூர் மாவட்டம்.
3. தலைமை ஆசிரியர்கள் / தாளாளர்கள்,
   அரசு / நிதியுதவி / ஆதிந. / தொடக்கக்/ நடுநிலை
   உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

சிறப்பு/தனிக்கவனம்

மாவட்ட ஆட்சி தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

ந.க.எண்: 403/கே/2021

நாள்: .10.2021

## சுற்றறிக்கை

3273

26 OCT 2021

பொருள்: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் – வேலூர் மாவட்டம் – 2021 –ம் ஆண்டு காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளி பண்டிகை கால கதர் சிறப்பு விற்பனைக்கு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது – நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

பார்வை:

1. தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை ந.க.எண்:2502/கே3/2021, நாள்: 09.06.2021.
2. தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை ந.க.எண்:3334/கே3/2021, நாள்: 28.07.2021.

*******

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மாவட்ட அலுவலகம் வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

இவ்வலுவலக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கதர் அங்காடிகள் மூலம் கதர் பட்டு, கதர் பருத்தி, கதர் பாலியஸ்டர் மற்றும் கம்பளி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கதர் விற்பனையை ஊக்குவிப்பதன் மூலம் இத்தொழிலையே நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான கிராமப்புற கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்க இயலும்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, கதரங்காடிகளில் 02.10.2021 முதல் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்கப்படுகிறது. இந்த ஆண்டு வேலூர் கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு தீபாவளி விற்பனை குறியீடாக ரூ.78.12 இலட்சம் மற்றும் ஆண்டு குறியீடாக ரூ.130.20 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்கு மத்திய அரசு, மாநில அரசுகளால் 30% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

1) இச்சிறப்பு விற்பனைக் காலத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகங்களில் தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் அமைக்க இட வசதி செய்து தருமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களை கேட்டுக்கொள்கிறேன்.

2) வேலூர், கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளதால் கடன் முறையில் அரசு பணியாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் கதர் இரகங்களுக்கான தொகையினை ஒவ்வொரு பணியாளர்களிடமிருந்து நேரில் வந்து வசூல் செய்வதில் மிகுந்த சிரமம் உள்ளதால் கடன் தொகையினை 10 தவணைகளாக சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மூலமாக ஊதியத்தில் பிடித்தம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3) எனவே, இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி கதர் இரகங்களின் விற்பனையை அதிகரித்து வேலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் விற்பனை குறியீட்டினை எய்திடும் பொருட்டு, மாவட்ட அளவிலான அனைத்து துறை அலுவலர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கதர் விற்பனைக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

<u>பெறுநர்:</u>

1. ஆணையாளர் வேலூர் மாநகராட்சி.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர்.
3. இணை இயக்குநர் (நலப்பணிகள்), வேலூர்.
4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், வேலூர்.
5. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்)
6. துணை இயக்குநர் (பொது சுகாதாரம்), வேலூர்.
7. மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர், வேலூர்.
8. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், வேலூர் மாவட்டம்.
9. வட்டாட்சியர், வேலூர்.
10. உதவிக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
11. நகராட்சி ஆணையாளர், வேலூர்.

நகல்: உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், வேலூர்.